# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**முறையீட்டு மனு எண்: 196/2018/பே**
**ஆணை நாள். 26–12–2018.**

**திரு. M. சுனில் குமார்,**
**5/1268, மகாலெட்சுமி நகர் விரிவு,**
**மடிப்பாக்கம்,**
**சென்னை –91**

**-- முறையீட்டு மனுதாரர்.**

**திரு.கே.மனோகரன்,**
**உதவி செயற்பொறியாளர்,**
**செயல் அலுவலர்கள்,**
**பெருங்களத்தூர், திருநீர்மலை மற்றும்**
**பீர்க்கன்கரணை பேரூராட்சிகள்**
**திரு நடராஜன்,**
**உதவிப் பொறியாளர்,**
**திரு.பழனி,**
**மேற்பார்வையாளர்**

**-- எதிர் மனுதாரர்கள்.**

**ஆணை.**

சென்னை–91, மடிப்பாக்கம், எண்.5/1268 மகாலட்சுமி நகர் விரிவு பகுதியினைச் சேர்ந்த திரு.M. சுனில் குமார் என்பவருடைய 23.08.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.08.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.196/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு.எம்.சுனில்குமார், தனது முறையீட்டு மனுவில், காஞ்சிபுரம் மாவட்டம், பெருங்களத்தூர், பீர்க்கன்கரணை மற்றும் திருநீர்மலை பேரூராட்சி செயல் அலுவலர்கள் காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர் மற்றும் பேரூராட்சி உதவிப்

பொறியாளர்கள் ஆகியோர் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் தனி நபர் கழிப்பறைப் பணிகளில் நிதி முறைகேடுகள் செய்துள்ளதாக, மேற்கண்ட பேரூராட்சிகளில் இருந்து தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் புகார்கள் தெரிவித்து தனது முறையீட்டு மனுவினை விசாரணை கோரி இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

07.09.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம் மேற்கண்ட முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு ஆணையிடப்பட்டது.

01.10.2018 நாளிட்ட பீர்க்கன்கரணை பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதத்தில் மேற்படி பேரூராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்.105/நாள்.21.07.2015ன் படி தூய்மை இந்திய திட்டத்தின் கீழ், தனி நபர் கழிப்பிடம் கட்ட மத்திய அரசு மான்யம் ரூ.4,000/– மாநில அரசு மான்யம் ரூ.2,000/– பேரூராட்சி பங்குத் தொகை ரூ.2,000/– மற்றும் பயனாளிகளின் பங்குத் தொகை ரூ.4,000/– என நிர்ணயம் செய்யப்பட்டு 56 தனி நபர் கழிப்பிடம் கட்ட ஒதுக்கீடு பெறப்பட்டதாகவும், இதில் 54 எண்கள் கழிப்பிடம் கட்டப்பட்டு, பயனாளிகளுக்கு மத்திய மாநில மற்றும் பேரூராட்சி பங்குத் தொகையாக ரூ.8,000/– வீதம் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள இரண்டு பயனாளிகளின் வீடுகள் பூட்டிய நிலையிலேயே இருந்ததால், மேற்படி நபர்களின் பெயர்களை நீக்கம் செய்ய பேரூராட்சியின் 28.02.2018 நாளிட்ட கடிதம் மூலம் பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, உரிய அனுமதி பெறப்பட்டு, இரு பயனாளிகளுக்கான மத்திய மற்றும் மாநில அரசுகள் மான்யத் தொகை தலா ரூ. 6,000/– வீதம் மொத்தம் ரூ.12,000/– பேரூராட்சிகளின் இயக்குநருக்கு வங்கி வரைவோலை எண்.686498/30.08.2018ன் படி அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருநீர்மலை பேரூராட்சி செயல் அலுவலரின் 01.10.2018 நாளிட்ட அறிக்கை மூலம் மேற்படி பேரூராட்சிக்கு 553 எண்ணிக்கை தனி நபர் கழிப்பிடப் பணிகள் ஒதுக்கப்பட்டு, அதற்கான மத்திய மற்றும் மாநில அரசு பங்குத் தொகையாக ரூ.33,18,000/– வரப்பெற்றதாகவும், மேற்படி ஒதுக்கீட்டில் பல்வேறு காரணங்களுக்காக நீக்கம் செய்யப்பட்ட 210 பயனாளிகளுக்கான மத்திய மற்றும் மாநில அரசு பங்குத் தொகை ரூ.6,000/– வீதம் மொத்தத் தொகை 12,60,000/– பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களுக்கு வங்கி வரைவோலை எண். 265985/நாள். 30.08.2018ன் மூலம் திருப்பி அனுப்பப்பட்டதாகவும், மீதமுள்ள 343 பயனாளிகள் தனி நபர் கழிப்பிடம் கட்டிய வகையில் மத்திய, மாநில மற்றும் பேரூராட்சி பங்குத் தொகையாக ரூ.27,44,000/– சம்பந்தப்பட்ட பயனாளிகளின் வங்கி கணக்குகளில் இணைய தளம் மூலம் ஈடு செய்யப்பட்டுள்ளதாவும், இதில் முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் முறைகேடு ஏதும் நடைபெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

பெருங்களத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் 15.10.2018 நாளிட்ட அறிக்கையில் மேற்படி பேரூராட்சிக்கு 2015–16 மற்றும் 2016–17ம் ஆண்டுளில் தூய்மை இந்திய ா திட்டத்தின் கீழ் முறையே 128 மற்றும் 383 என மொத்தம் 511 தனி நபர் கழிப்பறைகள் கட்ட ஒதுக்கீடு பெறப்பட்டு, இதற்கான மத்திய மாநில அரசு பங்குத் தொகையாக ரூ.6,000/– வீதம் மொத்தம் ரூ.30,66,000/– பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஒதுக்கீட்டில் 28

பயனளிகள் மீள ஒப்படைப்பு செய்யப்பட்டு, இதற்கான மத்திய மாநில அரசு மான்யத் தொகை ரூ. 6,000/– வீதம் ரூ.1,68,000/– பேரூராட்சிகளின் இயக்குநருக்கு வங்க வரைவோலை எண். 768836 ன் மூலம் திரும்ப அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் மூலம் கட்டப்பட்ட கழிப்பிடங்களுக்கான மத்திய மாநில மற்றும் பேரூராட்சி பங்குத் தொகையாக மொத்தம் ரூ.8,90,000/– சம்பந்தப்பட்ட பயனாளிகளின் வங்கி கணக்குகளில் ஈடு செய்யப்பட்டுள்ளதாகவும், சில பயனாளிகள் தங்களிடம் போதிய நிதி வசதி இல்லை எனத் தெரிவித்தும், பேரூராட்சியின் மூலம் கழிப்பிடம் கட்டி கொடுக்கப்பட்டால் மான்யத் தொகையினை கழிப்பிடம் கட்டும் நபருக்கே வழங்குவதாக எழுத்து மூலம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு தெரிவித்ததின் அடிப்படையில், 185 கழிப்பிடப் பணிகளை பேரூராட்சியில் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் மூலம் கட்டப்பட்ட கழிப்பிடப் பணிகளை பேரூராட்சி உதவிப் பொறியாளர் ஆய்வு மேற்கொண்டு சான்றளித்த பின்னர் அதற்கான மான்யத் தொகை உரிய ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டதாகவும், இதில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளவாறு முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ 20.11.2018 நாளிட்ட அழைப்பாணையில் முறையீட்டு மனுதாரரின்தரப்பிலான விளக்கத்தினை சமர்ப்பித்திட ஏதுவாக 30.11.2018 அன்று ஆஜராகத் தெரிவித்து அழைப்பாணை அனுப்பப்பட்டது. மனுதாரர் குறிப்பிட்டிருந்த முகவரியில் யாரும் இல்லை என்ற விவரம் குறிக்கப்பட்டு இம்முறைமன்ற நடுவத்தால் அனுப்பப்பட்ட மேற்படி அழைப்பாணை அஞ்சல் துறையிடமிருந்து திரும்ப வரப்பட்டுள்ளது.

20.11.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்பேரில், இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது வாக்குமூலத்தில், முறையீட்டு மனுதாரரின் 23.08.2018 நாளிட்ட புகார் மனு குறித்த விவரம் தெரியும் எனவும், தனி நபர் கழிப்பறைக் கட்ட மத்திய அரசு ரூ.4,000/– மாநில அரசு நிதி ரூ.2,000/– சம்பந்தப்பட்ட பேரூராட்சி பங்குத் தொகையாக ரூ.4,000/– எனவும், பயனாளிகளின் பங்குத் தொகை ரூ.4,000/– அலுவலகத்தில் செலுத்துவதில்லை எனவும், முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் ரூ.7,200/– மத்திய அரசும் ரூ.4,500/– மாநில அரசும் வழங்கியுள்ளது என்பது தவறான தகவல் எனவும், திருநீர்மலை, பீர்க்கன்கரணை மற்றும் பெருங்களத்தூர் ஆகிய மூன்று பேரூராட்சிகளும் சேர்ந்து மொத்தம் 880 கழிப்பறைகள் கட்டியுள்ளதாகவும், மேற்படி மூன்று பேரூராட்சிகளுக்கும் 1,120 கழிப்பறைகள் கட்ட ஆணை வழங்கப்பட்டதில், 240 எண்ணிக்கையிலான கழிப்பறைகள் கட்ட போதிய இட வசதியின்மையினாலும், பயனாளிகளின் ஒத்துழைப்பின்மையினாலும் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு மேற்படி 240 பயனாளிகளின் பெயர்களை பட்டியலில் இருந்து நீக்கம் செய்யப்பட்டு மீதமுள்ள 880 பயனாளிகளுக்கு கழிப்பறைகள் கட்டப்பட்டதாகவும், விழிப்புணர்வு பிரசுரங்கள் செயல் அலுவலர்களால் நேரடியாக மேற்கொள்ளப்பட்டதாகவும், பணிகள் நடைபெறும்போது பணிகள் முறையாக நடைபெறுகிறதா, தகுதியாக உள்ளதா, குறைபாடுகள் ஏதும் உள்ளதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்வது மட்டுமே தங்களின் பணி எனவும் மற்றபடி தனி நபர் கழிப்பறை என்பது ஒவ்வொரு தனி நபராலும் கட்டப்படும் நிரந்தரமான பணி எனவும் இதில் மத்திய மாநில உள்ளாட்சி மற்றும் பயனாளிகளின் பங்களிப்பில் நடைபெறுவதாகவும் தெரிவித்துள்ளார். எனவே மற்ற பணிகள் போன்று இதற்கு

அளவீடுகள் செய்வதோ, மேலளவு செய்வதோ தேவையில்லை எனவும், இதில் பணிகள் நடந்த விவரம், பணிகள் முடிவுற்ற விவரம் பணி மேற்பார்வையாளரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இது குறித்த சான்று உதவிப் பொறியாளரால் அளிக்கப்படும் எனவும் இதில் உதவி செயற்பொறியாளருக்கு எந்தவித சம்பந்தமும், பணிகளும் இல்லை எனவும், பணிகள் முடிக்கப்பட்டமைக்கான சான்றொப்பம் பணி மேற்பார்வையாளர்களிடம் பெற்று பட்டியல் தயார் செய்வது பணம் விவரம் தயார் செய்வது என தங்களுடைய பணிகள் எதுவும் இல்லை எனவும், பணிகள் நடைபெற்றதா என பார்க்கும் பணி மட்டுமே தங்களுடையது எனவும் தெரிவித்துள்ளார். தனி நபர் கழிப்பறைப் பணிகள் அனைத்தும் புதிதாக கட்டப்பட்டது எனவும் ஏற்கனவே இப்பொருள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு சிலர் ஏற்கனவே தனி நபர் கழிப்பிடபணிகள் இருந்த இடங்கள் கண்டறியப்பட்டு அந்த பட்டியல் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பப்பட்டதாகவும், இதன் அடிப்படையில் **240** எண்ணிக்கையிலான கழிப்பிடப் பணிகள் பயன்பாட்டிலிருந்தும், புதிதாக கழிப்பிடம் கட்ட இயலாதவர்கள் விவரங்களை கண்டறிந்து அவர்களை நீக்கம் செய்து உண்மையான பயனாளிகளுக்கு புதிதாக கழிப்பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரர் பல துறைகளுக்கு இது போன்று ஆதாயத்தை எதிர்பார்த்து புகார் எழுதும் பழக்கம் உள்ளவர் எனவும், அரசு பணியாளர் என்ற முறையில் பிரச்சினை வளர்த்துக் கொள்ளக்கூடாது என கருதி அவரை தொடர்பு கொள்ளவில்லையெனவும், முறையீட்டு மனுதாரர் சமாதானம் செய்து கொண்டு தனது மனுவினை வாபஸ் பெற்றுக் கொள்வார் எனவும் இது போன்று ஏற்கனவே மின் துறையிலும் புகார் எழுதப்பட்டு பின்பு அவர்களிடம் ஆதாயத்தோடு சமாதானம் செய்து கொண்டார் எனவும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள முகவரி உண்மையான முகவரி இல்லை எனவும், அது ஒரு பள்ளியின் முகவரி எனவும், பெருங்களத்தூர், பீர்க்கன்கரணை பேரூராட்சி செயல் அலுவலர்கள் மூலம் மனுதாரருக்கு அனுப்பப்பட்ட கடித முகவரி தவறானது என தெரியவந்ததாகவும், முறையீட்டு மனுதாரர் பொய்யான முகவரியிட்டு பொய்யான புகார்களை ஆதாயம் பெறும் நோக்கில் எழுதக் கூடியவர் எனவும் தனது வாக்குமூலத்தில் காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி செயற் பொறியாளர் அலுவலக உதவி செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

**20.11.2018** நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்பேரில், **27.11.2018** அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான திருநீர்மலை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.வி.பிரேமா, தனது வாக்குமூலத்தில் திருநீர்மலை பேரூராட்சிக்கு தனி நபர் கழிப்பறைக் கட்டும் திட்டத்தில் **553** ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்பு **210** பயனாளிகள் பெயர்கள் நீக்கம் செய்யப்பட்டு **343** தனி நபர் கழிப்பறைகள் மட்டும் கட்டப்பட்டுள்ளதாவும் இதில் ஒப்பந்தக்காரர்கள் மூலம் எந்த கழிப்பறைகளும் கட்டப்படவில்லையெனவும், சம்பந்தப்பட்ட பயனாளிகளால் மட்டுமே பணிகள் முடிக்கப்பட்டு அதற்கான மத்திய, மாநில, பேரூராட்சியின் மான்யத் தொகைகள் விடுவிக்கப்பட்டதாகவும், தன்னால் மேற்படி பணிகள் சோதனை முறையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும், பணிகள் முடிக்கப்பட்டது குறித்து உறுதி செய்யப்பட்டதாகவும், முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

**20.11.2018** நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்பேரில், **27.11.2018** அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான பெருங்களத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.த.குணசேகரன் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரரின் **23.08.2015** நாளிட்ட

முறையீட்டு மனு விவரம் தெரியும் எனவும், இப்பொருள் தொடர்பாக 01.10.2018 தேதியில் திருநீர்மலை பேரூராட்சி சார்பாகவும், 15.10.2018 தேதியில் பெருங்களத்தூர் சார்பாகவும் தலா ஒரு விளக்க அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், பீர்க்கன்கரணை பேரூராட்சியில் பயனாளிகளாலேயே அனைத்து கழிப்பறைகளும் கட்டப்பட்டதாகவும், 54 கழிப்பறைகள் இத்திட்டத்தின் கீழ் பீர்க்கன்கரளை பேரூராட்சியில் கட்டப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

பெருங்களத்தூர் பேரூராட்சியில் 483 தனி நபர் கழிப்பறைகள் கட்டப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளதாகவும், 185 கழிப்பறைகள் பயனாளிகள் தங்களால் கட்டிக் கொள்ள மறுத்ததால் ஒப்பந்தக்காரர் மூலம் கட்டப்பட்டதாகவும், பெருங்களத்தூர் பேரூராட்சி சார்பாக கட்டப்பட்ட கழிப்பறைகள் வழங்கப்பட்டத் தொகை ஆகியவை விரிவாக அளிக்கப்பட்டுள்ளதாகவும், மத்திய மாநில மற்றும் பேரூராட்சி பங்குத் தொகைகள் மட்டும் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டதாகவும் இதற்குரிய கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டே பணிகள் முடிக்கப்பட்டுளளதாகவும் தெரிவித்துள்ளார்.

திருவாளர் ஸ்டார் அண்ட் இண்டஸ்டரீஸ் மூலம் 137 கழிப்பறைகள் கட்டப்பட்டமைக்கு ரூ.10.96 லட்சம் வழங்கப்பட்டதகவும், திரு.சிதம்பரம் என்பவர் மூலம் 8 கழிப்பறைகளும் திரு.ஜெகதீசன் என்பவர் மூலம் 3 கழிப்பறைகளும் திரு.தயாளன் மூலம் 11 கழிப்பறைகளும் திரு.பெருமாள் என்பவர் மூலம் 4 கழிப்பறைகளும் மற்றும் பிறராலும் கட்டப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

ஒப்பந்தக்காரர்களுக்கு பணி வழங்கப்பட்ட இனங்களில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவில்லையெனவும், விழிப்புணர்வு பிரசாரம் செய்ததற்கு ரூ.1,26,192/– செலவினம் மேற்கொள்ளப்பட்டதாகவும், ஆனால் பேரூராட்சியில் இருந்து பெறப்பட்ட கடிதத்தில் மொத்தம் 15 இனங்களில் செலவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், இதில் மொத்த 15 இனங்களில் செலவு மேற்கொள்ளப்பட்டதாகவும் அதற்குரிய செலவின சீட்டுகள் உள்ளதாகவும், மனுதாரர் மற்றுட 3 நபர்கள் தனி அறை எடுத்து இது போன்று பல்வேறு துறைகளுக்கு புகார் அளிப்பதில் தினப் பணியாக செய்து வருவதாகவும், மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அவர் கோரிய விவரங்கள் தகவல்அ றியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அனுப்பப்பட்டதாகவும், மேற்படி கடிதம் முகவரியில் மனுதாரர் இல்லை என்று கடிதம் திரும்பப் பெறப்பட்டதாகவும், பெருங்களத்தூர் பேரூராட்சியில் இப்பணிகள் மேற்கொண்டபோது திரு.T.N. கமல்ராஜ் என்பவர் செயல் அலுவலராக இருந்ததாகவும் தற்போது அவர் ஓய்வு பெற அனுமதிக்காமல் தற்காலிக பணி நீக்கத்தில் உள்ளதாகவும் மற்றபடி எந்த முறைகேடும் நடைபறவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் தனது வாக்குமூலத்துடன் 27.11.2018 நாளிட்ட கடிதம் ஒன்றினையும் இத்துடன் முறையீட்டு மனுதாரரின் 15.10.2018 நாளிட்ட கடித நகலினையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

20.11.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்பேரில், 27.11.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான பீர்க்கன்கரணை பேரூராட்சி செயல் அலுவலர் திரு.த.குணசேகரன் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரரின் 23.08.2018 நாளிட்ட முறையீட்டு மனு குறித்த விவரம் தெரியும் எனவும் இப்பொருள் தொடர்பாக பீர்க்கன்கரணை பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரால் 10.10.2018ல் ஒரு அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும், பீர்க்கன்கரணை பேரூராட்சியில 54 தனி நபர் கழிப்பறைகள் பயனாளிகள் மூலமே கட்டப்பட்டதாகவும் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

20.11.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்பேரில், 27.11.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான பெருங்களத்தூர் பேரூராட்சி உதவிப் பொறியாளர் திரு. எ.நடராஜன், மற்றும் பணி மேற்பார்வையாளர் திரு. எம்.பழனி ஆகியோர் தங்களது வாக்குமூலங்களில் காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக உதவி செயற்பொறியாளர் தெரிவித்த கருத்துக்களையே தங்களது வாக்குமூலங்களிலும் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரரின் 15.10.2018 நாளிட்ட கடிதம் இம்முறைமன்ற நடுவத்தில் 29.10.2018ல் பெறப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தில் தனி நபர் கழிப்பிட பணிகளுக்கான மத்திய மாநில அரசு மான்யத் தொகைகள் குறித்து அரசு அலுவலர்களிடம் விவரங்களை கேட்டுப் பெறாமல் அவசரப்பட்டு தவறான புகாரினை அளித்துள்ளதாகவும், தான் தவறுதலாக அளித்த புகார் மனு மீது மேல் நடவடிக்கை தொடரவேண்டாம் எனவும், மேலும் தான் தவறுதலாக அளித்த புகார் மனுவினை திரும்பப் பெற்றுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 03.12.2018 நாளிட்ட அழைப்பாணையில் முறையீட்டு மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பாகவும், பெருங்களத்தூர் முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.டி.என்.கமல்ராஜ் ஆகியோர்களை இப்பொருள் தொடர்பான விளக்கங்களை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 21.12.2018 அன்று ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

இதன்படி இம்முறைமன்ற நடுவதில் 21.12.2018அன்று ஆஜரான பெருங்களத்தூர் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு.டி.என்.கமல்ராஜ் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரரின் 23.08.2018 நாளிட்ட புகார் மனு குறித்து தனக்கு தெரியும் எனவும், இது குறித்து பெருங்களத்தூர் பேரூராட்சியில் ரூ.1.20 லட்சம் இரண்டு ஆண்டுகளாக செலவினம் மேற்கொண்டதாகவும் இச்செலவினம் தூய்மை இந்திய திட்டத்திற்கு மட்டுமல்ல எனவும், டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு, திடக்கழிவு மேலாண்மை திட்டம், தனி நப கழிப்பறை போன்ற இனங்களுக்கான துண்டு பிரசுரங்கள் அச்சிடப்பட்ட வகையில் மேற்கொண்டது எனவும், இப்பணிகளில் முன்னாள் செயல் அலுவலர் திரு.கேசவன் என்பவரும் செய்துள்ளார் எனவும், அனைத்து செ சலவினங்களுக்கும் முறையாக பற்றுச் சீட்டுகள் உள்ளதாகவும் இவை அனைத்தும் உள்ளாட்சி நிதி தணிக்கை நடைபெற்றுள்ளதாகவும் , இது குறித்து தடைகள் ஏதும் எழுதப்பப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

பயனாளிக்கு வழங்கும் மான்யத் தொகை ரூ 8,000/– என்பது ஒரு அலகின் மான்ய மதிப்பு எனவும், இதில் ரூ.4,000/– மத்திய அரசும் ரூ.2,000/– மாநில அரசும் மற்றும் ரூ.2,000/– பேரூராட்சி பங்களிப்பாக வழங்கப்படுவதாகவும், பயனாளிகள் ரூ.4,000/– தங்களது பங்களிப்பாக கொண்டு கழிப்பறைக் கட்டிடத்தை கட்டி முடிக்கப்படவேண்டுமெனவும், இந்த பணியினை தாமாகவே செய்து கொள்ள பயனாளிகள் எவரும் முன் வராத நிலையில் ஏற்கனவே இருந்த பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மூலம் மேற்படி கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டதாகவும், பயனாளிகள் தாங்களே முன் வராததால் திட்டப் பணிகளை முடிக்கும் பொருட்டு ஒப்பந்தக்காரர்களை வற்புறுத்தி இப்பணிகள் செய்து முடிக்கப்பட்டதாகவும், மேலும்

ஒரு அலகிற்கான பங்களிப்புத் தொகை ரூ.8,000/– என்பதால் ஒப்பந்தப்புள்ளிகிள் எதுவும் கோரப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மனுவில் குறிப்பிட்டுள்ள ரூ.12,000/– என்பது கிராம ஊராட்சிகளுக்கு என நிர்ணயிக்கப்பட்டதாகும் எனவும், புகார் மனுவில் இதனை தவறாக புரிந்து கொண்டு பேரூராட்சிக்கு ரூ.12,000/– என தொகை தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், பேரூராட்சிகளுக்கு மேற்குறிப்பிட்ட விகிதப்படி ரூ.8,000/– மட்டுமே மான்யத் தொகை எனவும், பயனாளிகள் மேற்படி பணிகளை செய்யவில்லை என்பதாலும், ஒப்பந்தக்காரர்கள் மேற்படி பணிகளை செய்தமையாலும் அதற்கான பணத்தை ஒப்பந்தக்காரர்களிடமே கொடுக்குமாறு சம்மத கடிதத்தினை கையொப்பமிட்டு பயனாளிகள் வழங்கியுள்ளதாகவும், எந்த ஒரு பயனாளியும் இதுவரை எவ்வித புகாரும் செய்யவில்லையெனவும், தன்னுடைய பணிக்காலததில் மேற்படி பணிகள் முடிவற்றதை முழுமையாக ஆய்வு செய்துள்ளதாகவும், பணிகள் சம்பந்தப்பட்ட பயனாளிகளால் செய்யப்படாததால் ஒப்பந்தக்காரர் மூலம் பணிகள் செய்து முடிக்கப்பட்டதாகவும், பணி முடித்தமைக்கான சான்றுகள் பணி மேற்பார்வையாளரால் வழங்கப்பட்டு, இளநிலை பொறியாளரால் மேல் அளவை செய்யப்பட்டு பட்டியலில் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னரே பட்டியல் சரிபார்க்கப்பட்டு தொகை பட்டுவாடா செய்யப்பட்டதாகவும், நேரடியாக பணிகள் செய்தவர்களுக்கே தொகை பட்டுவாடா செய்யப்பட்டதால் பயனாளிகளின் வங்கி கணக்கில் பணம் செலுத்த வேண்டிய அவசியம் எழவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் திரு.சுனில்குமார் என்பவர் பணத்தை எதிர்பார்த்து பலன் கிடைக்காவிட்டால் இது போன்று புகார் மனு அனுப்பும் பழக்கம் உள்ளவர் எனவும், இவர் தான் பணியில் இருக்கும்போது, தான் அலுவலகத்தில் இல்லாத போது அலுவலகத்திற்கு வந்து மிரட்டி சென்றதாகவும், மேலும் பல அலுவலர்கள் குறித்தும் இது போன்று புகார்கள் எழுதியுள்ளதாக தெரிவதாகவும், மேலும் மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரியில் அவர் வசிக்கவில்லை எனவும் அது பொய்யான முகவரி எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள எதிர் மனுதாரர்களின் வாக்குமூலம், பெருங்களத்தூர் முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டன. எதிர் மனுதாரர்கள் உரிய அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளனர்.

ஆனால் முறையீட்டு மனுதாரர் அவரது விளக்கங்களை பதிவு செய்ய வாய்ப்பளித்து அழைப்பாணைகள் அனுப்பியும் விசாரணைக்கு ஆஜராகாததோடு, 20.11.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையும் முறையீட்டு மனுதாரர் முகவரியில் இல்லை என்ற விவரத்துடன் அஞ்சல் துறை மூலம் திருப்பப்பட்டுள்ளது. மேலும் முறையீட்டு மனுதாரரின் 15.10.2018 நாளிட்ட கடிதத்தில் மேற்படி விவரங்களை உரிய அலுவலர்களிடம் தெரிந்து கொள்ளாமல் புகார் மனு அனுப்பியதாகவும் தனது புகார் மனுவினை வாபஸ் பெற்றுக்

கொள்வதாகவும் தெரிவித்துள்ளார். எனவே முறையீட்டு மனுதாரர் மனுவில் குறிப்பிட்ட முகவரியில் இல்லை என்பதும், தனது புகார் மனுக்களை ஆதாரங்கள் ஏதுமின்றி அனுப்பி உள்ளார் என்பதும் தெளிவாகிறது. முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தின் காலத்தினை விரயம் செய்ததுடன், பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள், தொழில் நுட்ப அலுவலர்கள் மீதும் முறையற்ற புகார்கள் அளித்து தேவையற்ற விசாரணைகள்/போக்குவரத்து செலவினங்களை ஏற்படுத்தியுள்ளார். இத்தகையாக முறையற்ற செயலபட்டினை இனி தவிர்த்திட வேண்டுமென மனுதாரருக்கு வலியுறுத்தி முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–/ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

பெ. பழனிவேல்

செயலாளருக்காக.

பெறுநர்

1.திரு. ஆ. சுனில் குமார்,
5/1268, மகாலெட்சுமி நகர் விரிவு,
மடிப்பாக்கம்,
சென்னை –91.

2.செயல் அலுவலர்,
பெருங்களத்தூர் பேரூராட்சி,

3.செயல் அலுவலர்,
திருநீர்மலை பேரூராட்சி,

4.செயல் அலுவலர்,
பீர்க்கன்கரணை பேரூராட்சி,

5.திரு.மனோகரன்,
உதவி செயற்பொறியாளர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
காஞ்சிபுரம்

5.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
காஞ்சிபுரம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

6.திரு.நடராஜன்,
உதவிப் பொறியாளர்,
பெருங்களத்தூர் பேரூராட்சி.

7.திரு.பழனி,
பணி மேற்பார்வையாளர,
பெருங்களத்தூர் பேரூராட்சி.